## இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவகம் - 2017

இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 09 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1988 இன் 53 ஆம் இலக்க இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவக அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று நிறுவகத்தின் தலைவருக்கு 2018 செப்தெம்பர் 21 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 115,394,076 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 14,683,781 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 154,202,781 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 139,519,000 ஆன வீழ்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. காணிகளிற்காக அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட மூலதன மானியம் ரூபா 151,320,000 முன்னைய ஆண்டின் வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தமையே மேற்படி வீழ்ச்சிக்கான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை மிகையொன்று காணப்பட்டது. நிதி விளைவுகளிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வினை மீண்டும் சீராக்கம் செய்த போது 2013 ஆம் ஆண்டின் போதான ரூபா 68,837,107 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 74,018,254 வரை அதிகரித்து 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 73,390,333 ஆக குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 220,274,231 அதிகரிப்பொன்று காணப்பட்டதுடன் மீண்டும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 72,997,491 வரை குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் நடவடிக்கைகளை முகாமை செய்வதற்காக குறுகிய கால மற்று நீண்ட கால தூரநோக்குகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் எதிர்வுகூறப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ளக்கூடிய வகையில் நிறுவகம் செயற்பட வேண்டியது நிறுவகத்தின் முழுமையான பொறுப்பாக காணப்பட்ட போதிலும் அதற்கிணங்க நிறுவகத்தினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிராத ஆராய்ச்சி செயற்திட்டங்கள் நிறுவகத்தினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதி செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை. ஆகையால் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயன்முன்னேற்றம் அளவிடப்பட முடியாதிருந்தது.

#### 4.1.2 செயலாற்றல் மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1988 இன் 53 ஆம் இலக்க இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) அதிகாரச்சட்டத்தின் 5(ஏ) பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் நோக்கங்களிற்கு சமமான அதே நோக்கங்களை கொண்டிருக்கின்ற இலங்கை மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சி நிறுவகங்களுடன் ஒருங்கிணைப்புக் குழுக்களை நிறுவகம் ஸ்தாபித்து பேண வேண்டியதுடன் அந் நிறுவகங்களுடன் கூட்டிணைந்து செயற்படுவதற்கு வசதியளிகப்பட வேண்டும்.

(ii) அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் உதவி மற்றும் கூட்டிணைப்புடன் கையேற்கப்பட வேண்டிய கொள்கைக் கற்கைகள் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிவுரைகள் வழங்குவதற்காக ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவொன்று (Research Advisory Committee) பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 37 ஆராய்ச்சி செயற்திட்டங்களிலிருந்து ரூபா 53,326,088 தொகையை நிறுவகம் உழைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ஆராய்ச்சி செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றத்தை சுட்டிக்காட்டுகின்ற செயலாற்றல் அறிக்கை நிறுவகத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டில் வேலை முடிவுறுத்தப்படாமல் 05 ஆராய்ச்சி பிரிவுகளிற்குரிய 14 செயற்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 32,122,534 வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த 14 ஆராய்ச்சி செயற்திட்டங்களில் மீளாய்வாண்டின் போது 07 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் ஏனைய 05 ஆராய்ச்சி செயற்திட்டங்களிற்காக கொடையாளர்களிடமிருந்து ரூபா 13,592,237 முற்பணத் தொகை பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

மீளாய்வாண்டின் போது வெளியிடப்பட்ட 11 வகையான புத்தகங்களில் 3100 புத்தகங்களை அச்சிடுவதற்காக ரூபா 818,400 செலவிடப்பட்டிருந்தது. அவற்றில் 1662 புத்தகங்களை விற்பனை செய்ததன் மூலம் ரூபா 505,393 வருமானம் பெறப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு அச்சிடப்பட்ட 1438 புத்தகங்கள் எஞ்சியிருந்தன. அதன் பிரகாரம் தேவைப்பாட்டை உரியவாறு இனங்கண்டு கொள்ளாமல் புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்ததால் ஆண்டின் போது அச்சிடப்பட்ட புத்தகங்களில் 46 சதவீதம் விற்பனை செய்யப்படவோ அல்லது விநியோகிக்கப்படவோ முடியாது எஞ்சியிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை வெயியீட்டுப் பிரிவில் ரூபா 1,246,995 பெறுமதியான 4005 புத்தகங்கள் எஞ்சியிருந்தன.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சிநிரல்'' இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவகமும் முறையாக செயற்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக தேசிய கொள்கைகள் கற்கை நிறுவகத்தினால் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் காலாண்டிற்கு ஒரு முறை உள்ளகக் கணக்காய்வு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழுவில் கலந்துரையாடுவதற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் சமர்ப்பிக்கப்படுவதற்கு தவறியிருந்தன.

**6.2 பெறுகைத் திட்டம்**

---

நிறுவகத்தால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. வேலையின் கால எல்லை குறிப்பிடப்பட்டிருக்காததுடன் அத் திட்டம் ஒழுங்காக மேற்பார்வை செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்தை உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பீடு செய்யும் போது 6.6 சதவீதம் தொடக்கம் 102.2 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

**7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு மீள்பெறுமதியிடப்படாமை. |
| (ஆ) | திட்டத்தை தயாரித்தல் | மீளாய்வாண்டிற்குரிய கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் செயல்நடவடிக்கைத் திட்டம் காலரீதியாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்காமை. |